# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 09.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)**

**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 14034/SCIC/2022**

திரு.V.C. இரவிச்சந்திரன்
த/பெ.M.P.V.செல்லம் பிள்ளை                    மேல்முறையீட்டாளர்
அறை எண். 3, முதல் தளம், சல்மா காம்ப்ளக்ஸ்
கமலம் பல் மருத்துவமனை பின்புறம்,
மேலூர் மெயின்ரோடு,
யா ஒத்தக்கடை, மதுரை - 625 107.

//எதிர்//

1.பொதுத் தகவல் அலுவலர்/
பள்ளிக் கல்வித்துறை                    ....... பொதுஅதிகார அமைப்பு
தலைமைச் செயலகம், சென்னை-9
2. பொதுத் தகவல் அலுவலர்/
பொதுத் துறை, தலைமைச் செயலகம்
சென்னை-9
3.பொதுத் தகவல் அலுவலர் /
சட்டமன்றப் பேரவை செயலகம்
தலைமைச் செயலகம், சென்னை-9

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 18.05.2022 |
| 2. | மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன் கீழ் மாற்றம் | 24.05.2022, 23.06.2022 |
| 3. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 23.06.2022 |
| 4. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 24.06.2022 |

| | | |
|---|---|---|
| 5. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 06.08.2022 |
| 6. | ஆணையத்தின் அறிவிப்பு | 28.09.2022 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / அரசு முதன்மை செயலாளர், தமிழ்நாடு அரசு உள்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9 அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், "தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் முதலமைச்சர் அவர்களின் படம் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வைக்கப்படும் படங்கள் கட்டாயம் வைக்கப்பட்டுத்தான் ஆக வேண்டுமா, தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் முதலமைச்சர் அவர்களின் படம் வைக்கப்பட வேண்டுமென்று சட்டமன்றத்தில் தீர்மானம் எதுவும் இயற்றப்பட்டுள்ளதா அவ்வாறு தீர்மானம் இயற்றப்பட்டு இருந்தால் அதன் நகலை தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005-ன் கீழ் பதிலை தகவலாகவும், ஆவணமாகவும் வழங்க வேண்டுகிறேன்" என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (09/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. மனுதாரர், 02/06/2025 தேதியிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தனக்கு காணொளி காட்சி வாயிலான விசாரணை வேண்டுமெனக் கோரியுள்ளார். அக்கடிதம் ஆணையத்திற்கு 04/06/2025 அன்று கிடைக்கப் பெற்றது. மனுதாரரின் இறுதி நேர வேண்டுகோளை ஆணையத்தால் ஏற்க இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி.தா.லீலாவதி, அரசு சார்புச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, திரு.அ.லூர்து அருண் சுவாமிநாதன், அரசு சார்புச் செயலாளர், பொதுத் துறை மற்றும் திருமதி / செல்வி.அலமேலு, துணைச் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், தலைமைச் செயலகம், சென்னை ஆகியோர் ஆஜரானார்கள். பொதுத் தகவல் அலுவலர் / பொதுத் துறை, மனுதாரருக்கு 23/06/2022 தேதியிட்டு இனம் 1-க்கான தகவல் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதனை மனுதாரரும் தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவில் இனம் 1-க்கு தகவல் வழங்கப்பட்டு, இனம்-2-க்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் / பள்ளிக் கல்வித்துறை அவர்கள் தெரிவிக்கையில், 18/10/2024 தேதியிட்டு பொதுத் (பொது-1) துறையிடமிருந்து மனுதாரரின் மனு கிடைக்கப் பெற்றதும், 25/10/2024 தேதியிட்டு தகவலும், அத்தகவல் தொடர்புடைய விதி நகலும் இணைத்து, மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவித்ததோடு, அக்கடிதம் அனுப்பியது தொடர்பான அனுப்புகை சான்றினையும் ஆணையத்தின் முன் காண்பித்தார். எனவே, இனம் 2-க்கான தகவல், ஆவணங்களின்படியான உரிய தகவல் வழங்கப்பட்டதாக ஆணையம் பதிவு செய்து ஏற்கிறது. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

## வழக்கு எண். SA 14034/SCIC/2022

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.பொதுத் தகவல் அலுவலர்/
பள்ளிக் கல்வித்துறை
தலைமைச் செயலகம், சென்னை-9

2. பொதுத் தகவல் அலுவலர்/
பொதுத் துறை, தலைமைச் செயலகம்
சென்னை-9

3.பொதுத் தகவல் அலுவலர் /
சட்டமன்றப் பேரவை செயலகம்
தலைமைச் செயலகம், சென்னை-9

**மேல்முறையீட்டாளர்**

திரு.V.C. இரவிச்சந்திரன்
த/பெ.M.P.V.செல்லம் பிள்ளை
அறை எண். 3, முதல் தளம், சல்மா காம்ப்ளக்ஸ்
கமலம் பல் மருத்துவமனை பின்புறம்,
மேலூர் மெயின்ரோடு,
யா ஒத்தக்கடை, மதுரை - 625 107.

RG/PC